**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 24–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1 –ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு .சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | புவனேஸ்வரி | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**24.07.2025 OS.No. 3/2023 வா.சா. 1 புவனேஸ்வரி ஆஜர்**

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc Comp Science படித்துள்ளேன். நான் குடியிருக்கும் வீட்டின் வாசல் கிழக்கு திசை பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கீழ் புறம் பெருமாள் கோவில் வீதி என்றால் சரிதான். மேற்படி வீதியின் வழியாக நான் எனது வீட்டில் இருந்து மெயின் ரோட்டிற்கும் மெயின் ரோட்டிலிருந்து வீட்டிற்கும் எவ்வித இடைஞ்சலும் இன்றி போய் வர முடியும் என்றால் சரிதான் . பாப்பம்மாள் கோவிலுக்கு எனது வீட்டின் வடபுறத்தில் பாதை உள்ளது என்றால் சரிதான் . 2010 ம் ஆண்டிற்கு பிறகு தான் அந்த பாதை பயன்பாட்டிற்கு வந்தது . நான் கிரையம் வாங்கிய சொத்தானது 4 சர்வே எண்களில் அடங்கியது என்றால் சரிதான். அந்த சொத்தில் தான் நான் தற்போது வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் கட்டியுள்ள வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கட்டிட வரைபட அனுமதியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . நான் வாங்கியுள்ள சொத்தில் அடங்கிய 4 சர்வே எண்களில் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் வருகிறது என்பது குறித்து நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . மூல பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்திலோ என் முன் பாத்தியஸ்த்தர்களின் மூல பத்திரத்திலோ தாவா பாதை எனக்கு பாத்தியமுடையது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . நான் கிரையம் பெற்ற ஆவணத்திலும் எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்திலும் சொத்து விபரத்தில் GR புல எண்கள் 49/112,49/113,49/114,49/115 ஆகியவற்றில் ஒரு பகுதி 652 1/2 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் கிரையம் வாங்கிய மொத்த விஸ்தீரணமே 652 1/2 சதுரடி தான். நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்திலும் எனது முந்தைய கிரைய ஆவணத்திலும் உள்ள ஜாதி மனையடிகள் பொருந்தவில்லை என்றால் சரியல்ல . எனது வீட்டின் மாடி படிக்கட்டுகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அமைந்துள்ளது என்றால்

சரியல்ல. தெற்கு பக்கம் தான் எனது வீட்டின் மாடி படிக்கட்டுகள் உள்ளது. நான் வீடு கட்ட தொடங்கும் போது சர்வேயரை வைத்து அளந்து பார்த்து கட்ட தொடங்கவில்லை என்றால் சரியல்ல. நான் இடத்தை கிரையம் வாங்கியபோது அளந்து பார்த்து கிரையம் வாங்கினேன் . நான் 1ம் பிரதிவாதியின் மீது திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் எனது இடத்தை அளந்து பார்த்தேனா என்றால் நான் மானாமதுரை நீதிமன்றத்தில் எனக்கு தாவா சொத்து பொது சந்து அதை அளந்து பார்த்து ஆக்கிரமிப்புகளை அகற்றி தர வேண்டி மனு கொடுத்தேன். அந்த மனுவிற்கு தாவா சொத்தை வந்து அளந்து பார்த்தார்களா என்றால் அளந்து பார்க்கவில்லை . இலவச சட்டப்பபணிகள் ஆணைக்குழுவில் எங்களை கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ள கடையை எனது கிரைய பத்திரத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். முத்திரைத் தாள் கட்டணத்தை குறைத்து காட்ட வேண்டி மேற்படி நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ள கடையை எனது கிரைய பத்திரத்தில் காட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆதரவாக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . நான் பொய்யான சாட்சிகளையும் சான்றாவணங்களையும் அளித்துள்ளேன் என்றாலும் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி எதுவும் பெறவில்லை என்றாலும் அவ்வாறு நான் பெற்றிருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam